# ஏப்ரல் 18

## *புனித அப்பொலோனியுஸ் (-186)*

180ஆம் ஆண்டில் அப்பொலோனியுஸ் என்ற அறிஞர் கிறிஸ்தவரானார். இவருக்கு ஓர் அடிமையுண்டு. அவன் பெயர் செவேருஸ். அவன் தன் எஜமான் கிறிஸ்தவன் என பழி சுமத்தினான். குற்றம் சாட்டிய அடிமை அக்காலத்தில் சட்டப்படி கொல்லப்பட்டான். கிறிஸ்தவ மதத்தை விட்டுவிடும்படி நடுவன் அப்பொலோனியுசுக்கு கட்டளையிட்டான். அவர் மறுத்தார். உரோமை உயர் நீதி மன்றத்திற்கு நடுவன் அவரை அனுப்பினான். கிறிஸ்தவ மதமே உண்மையான மதம் என்று இவர் அழகாக எழுதி எங்கு கூடியிருந்தவர்களுக்கு படித்துக்காட்டினார். இவர் வேதத்திற்காகக் கொல்லப்பட்டார்.

### சிந்தனை:

கிறிஸ்தவர்கள் சண்டையின்றி அமைதியாக வாழ்வார்களானால் அவிசுவரிசகள் நம் வேதத்தில் சேரவும்,மெய்யான கடவுளை அறிந்து வழிபட்டு மோட்சம் அடையுவும் வாய்ப்பு கிடைக்கிறது. சண்டையிடும் கிறிஸ்தவர்கள் அவிசுவாசிகளுக்கு பெரும் இடறலாயிருக்கிறார்கள்.

### செபம்:

ஆண்டவரே, வீரத்துவம் வாய்ந்த தலைவர்களை திருச்சபைக்கு தாரும்.